2025 அக்டோபர் மாதம் 30 – ஆம் தேதி வியாழக்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

எம் .சி .ஓ .பி. நெம்பர் : 275/2019

2025–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 30 – ஆம் தேதி வியாழக்கிழமை மனுதாரர் தரப்பு சாட்சியாகிய PW2 நபரின் வாக்கு மூலம்

(1969–ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.C.லதா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW2 – அசோக்குமார் |
| தந்தை பெயர்: | நடராஜன் |
| ஊர்: | மதுரை |
| வட்டம்: | மதுரை |
| மாவட்டம்: | மதுரை |
| தொழில்: | மருத்துவர் |
| வயது : | 71 |

தேதி : 30.10.2025.

முதல் விசாரணை: –

நான் இந்த மனுவில் மனுதாரர் தரப்பு கூடுதல் சாட்சியாவேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம்அளிக்க வந்துள்ளேன். நான் தற்சமயம் வேலம்மாள் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மூளை நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணராக பணிபுரிகிறேன். நீதிமன்ற அழைப்பாணையில் கோரியுள்ள ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். 17.11.2016 ம் தேதியன்று மதியம் 2.45 மணியளவிற்கு சதீஷ்குமார் என்ற 32 வயதுடைய நபர் வாகன விபத்தினால் ஏற்பட்ட தலைக்காயத்துடன் மேற்படி சிகிச்சைக்காக வேலம்மாள் மருத்துவமனைக்கு அழைத்துவரப்பட்டிருந்தார். நான் பரிசோதித்து பார்த்தப்போது, சுயநினைவின்றி செயற்கை சுவாச கருவியுடன் இணைத்து வைத்தியம் செய்யப்பட்டுள்ளது. அவருக்கு சி.டி.ஸ்கேன் எடுத்துப் பார்த்ததில்

மூளைக்கும் மண்டை ஓட்டிற்கும் நடுவே ரத்தக்கட்டு ஏற்பட்டு, மூளையின் இரண்டு இடங்களில் மூளை சேதம் ஏற்பட்டிருந்தது. இதனடிப்படையில் அவருக்கு தலையில் Craniatomy என்ற அறுவை சிகிச்சை மூலம் இரத்தக்கட்டு அகற்றப்பட்டது. மேற்படி சிகிச்சைக்காக தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டு, செயற்கை சுவாச கருவியின் மூலம் வைத்தியம் செய்யப்பட்டது. மூளையின் வீக்கத்திற்கும், அதனால் வரும் விளைவுகளுக்கும் ஏற்ப மருந்துகள் கொடுக்கப்பட்டது. அவருடைய உடல்நிலையில், எந்தவிதமான மாற்றங்களும் ஏற்படாத காரணத்தினால் அதிகநாள் சுயநினைவின்றி இருப்பார் என்று கருதப்பட்டது. அதன்காரணமாக கழுத்தில் அறுவை சிகிச்சை செய்து, மூச்சுக்குழாயில் டியூப் போட்டு வைத்தியம் செய்யும் அறுவை சிகிச்சையான Tracheostomy செய்யப்பட்டு செயற்கை சுவாச கருவிகள் இணைத்து வைத்தியம் செய்யப்பட்டது. 60 நாட்களுக்கும் மேலாக செயற்கை சுவாக கருவியின் மூலம் வைத்தியம் செய்து, சுயநினைவானது கொஞ்சம் கொஞ்சமாக முன்னேற தொடங்கியதும், செயற்கை சுவாச கருவி எடுக்கப்பட்டது. அதன்பின்னர் படிப்படியாக உணர்வு வந்து, முன்னேற்றம் காணப்பட்டது. ஆனால் இடது கை, கால் செயலிழந்து போனது. மேற்படி அவருக்கு தீவிர சிகிச்சை தேவைப்படாத காரணத்தினால் அவரை வீட்டிற்கு அழைத்துச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டது. உறவினர்கள் ஏற்றுக்கொண்டதின்பேரில் 22.02.2017 ம் தேதியன்று மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டார். தொண்டையில் உள்ள டியூப் உடனே அனுப்பப்பட்டது. அதனால் நெஞ்சில் உள்ள சளி எடுப்பதற்கு உதவியாக இருக்கும் என அதனுடையே அனுப்பப்பட்டது. ம.சா.ஆ.3 மருத்துவ விடுவிப்பு சான்று எங்கள் மருத்துவமனையிலிருந்து வழங்கப்பட்டது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறிய விபரங்களை ம.சா.ஆ.3 ஆவணத்தில் சுருக்கமாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இறந்துபோன சதீஷ்குமார் என்பவருக்கு வேலம்மாள் மருத்துவமனையில் 98 நாட்கள் சிகிச்சை பெற்றதற்கான சிகிச்சை குறிப்புகள் அடங்கிய ஆவணம் தாக்கல்

செய்கிறேன். அது **சா.சா.ஆ.1** ஆகும். ம.சா.ஆ.4 ஆவணம் எங்கள் மருத்துவமனையிலிருந்து வழங்கப்பட்டது. அது மருத்துவக்கட்டணத்திற்குரிய ஆவணமாகும். விபத்து காயத்தினால் தான் அவருக்கு கை, கால் வராமலும், தலை காயங்கள் ஏற்பட்டும், பல உபாதைகளால் இறந்துபோனார் என்றால் சரிதான். எங்கள் மருத்துவமனையிலிருந்து வெளியேறி தேனி மற்றும் மதுரையில் உள்ள தனியார் மருத்துவமனைகளில் வைத்தியம் பார்த்து வந்தாலும், தலைக்காயத்தினால் இறந்துபோய் உள்ளார் என்றால் சரிதான்.

**1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–**

விபத்தினால் காயமடைந்த சதீஷ்குமார் மருத்துவச் சிகிச்சையின் பயனால் விபத்து காயங்களிலிருந்து முன்னேற்றம் அடைந்ததால் மருத்துவமனையிலிந்து விடுவிக்கப்பட்டார் என்றால் சரிதான். கை, கால் செயலிழந்ததற்கு தொடர்ச்சியாக மருத்துவ சிகிச்சை மேற்கொண்டு வந்திருந்தால் முன்னேற்றம் அடைய வாய்ப்புள்ளது என்று சொன்னால் உறுதியாக சொல்ல முடியாது. அல்லோபதி மருத்துவத்தின் மூலம் எடுத்துக்கொள்ளப்பட்ட மருத்துவ சிகிச்சையிலிருந்து மாற்றுமுறை மருத்துவ சிகிச்சைகளாக சித்தா, ஹோமியோபதி, ஆயுர்வேதம், தன்வந்திரி ஆகியவை மேற்கொண்டால் அந்த சிகிச்சையின் பக்க விளைவுகளால் நோயாளிக்கு இறப்பு ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் அது பற்றி எனக்கு அனுபவம் இல்லை. இறந்துபோன நபரினை உடற்கூறாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தால் அந்த நபரானவர் இறந்ததற்கான காரணங்களை கண்டறியவோ, உறுதிப்படுத்தவோ இயலும் என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 30.10.2025 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.10.30 18:51:36 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி (FAC), தேனி.
30.10.2025